

திண்டுக்கல் ரயில் நிலையத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு ஆத்தூர் தொகுதி பொதுமக்கள் பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர். அருகில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், தண்டபானி, கிழக்கு மாவட்ட துணைச்செயலாளர் நாகராஜன், ஒன்றிய செயலாளர் செழியன், துணை மேயர் ராஜப்பாஉட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### திண்டுக்கல் ரயில் நிலையத்தில்

# பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்கள்!

## அமைச்சர் ஐ. பெரியசாமி பெற்றார்!

திண்டுக்கல், டிச.9-

திண்டுக்கல் ரயில் நிலையத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ. பெரியசாமி அவர்களுக்கு ஆத்தூர் தொகுதி பொதுமக்கள் பாராட்டும் நன்றியும் தெரிவித்துள்ளனர். கழகத்தலைவர் கலைஞர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழியில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற தயக்கம் காட்டகூடாது என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார்.

ஆத்தூர் சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினரும் திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான, ஐ.பெரியசாமி சென்னை செல்வதற்காக திண்டுக்கல் ரயில் நிலையம் வந்த போது அங்கு அவரை சந்தித்த ஆத்தூர் தொகுதி மக்கள் கோரிக்கை மனு கொடுத்தனர் பாளையங்கோட்டை ஊராட்சி கூலம்பட்டியை சேர்ந்த செல்வி என்ற பெண் தனக்கு அரசு வேலை வாய்ப்பு வேண்டும் என கோரிக்கை மனு கொடுத்தார் அது பெற்றுக்கொண்ட அமைச்சர் பெரியசாமி அரசு வேலைவாய்ப்பு கிராமப்புற பெண்களுக்கு இல்லம் தேடி வரும் எனக் கூறி அவரை மகிழ்ச்சியில் ஆழ்த்தியதோடு தகுதி வாய்ந்தவர்களுக்கு ஆத்தூர் தொகுதியில் அரசு வேலை வாய்ப்பு உறுதியாக வழங்கப்படும் என்றார். அதன் பின்னர் பொதுமக்கள், கட்சி நிர்வாகிகள் மத்தியில் பேசிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வழியில் திராவிட மாடல் அரசு நாயகர் கழகத் தலைவர் தமிழக முதல்வர் ஸ்டாலின் அவர்களை பின்பற்றி செயல்பட்டு வருகிறேன். ஆத்தூர் தொகுதியில் எந்த விழாக்கு சென்றாலும் தொகுதி மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெறுவதற்கு தயக்கம் காட்டியதில்லை அதனால்தான் இரயில்வே நிலையத்திலும் கோரிக்கை மனு கொடுத்ததால் அதை பெற்று கொண்டு அதற்கான தீர்விற்கு உத்தரவிட்டுள்ளேன் என்றார். பொதுமக்கள் எந்த இடத்திலும் அவர்கள் தங்களுடைய கோரிக்கை மனு கொடுத்தாலும் அதை நிறைவேற்றும் அரசாக கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு உள்ளது அதனால்தான் பொதுமக்கள் அமைச்சர்களை தேடி மனு கொடுத்து தீர்வு பெற்று வருகின்றனர் என்றார். சட்ட சபை கூட்டம் முடிந்தவுடன் ஆத்தூர் தொகுதி முழுவதும் சுற்று பயணம் செய்தது பொது மக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்று அதற்கு உடனடியாக தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். சென்னை செல்வதற்காக ரயில் நிலையம் வந்த இடத்தில் கோரிக்கை மனு கொடுத்தவுடன் தீர்வு வழங்கிய ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி அவர்களுக்கு ஆத்தூர் தொகுதி மக்கள் மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர் நிகழ்ச்சியின் போதுதிண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, துணைச்செயலாளர்; ஆ.நாகராஜன், பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி ,ஆத்தூர் நடராஜன், ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, திண்டுக்கல் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், வெள்ளிமலை, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், மேற்கு ஒன்றிய செயலாளர் பிள்ளையார்நத்தம் ராமன், திண்டுக்கல் மாநகர செயலாளரும், துணை மேயருமான ராஜப்பா திமுக நிர்வாகி அம்பை ரவி,

சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், அமைச்சரின் உதவியாளர் ஹரிஹரன், மாநகர பொருளாளர் மீடியா சரவணன், பொதுக்குழு உறுப்பினர்கள் அக்பர் ,குட்டத்து ஆவாரம்பட்டி டென்னி, மலைச்சாமி மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கண்ணன்,மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விவேகானந்தன் ஒன்றிய குழு உறுப்பினர்கள் பாப்பாத்தி, சுமதி கணேசன் மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் பண்ணைப்பட்டி ஜே.அருண், ,தொழிலதிபர் விஷால் துவாரக நாதன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார் திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர்கள் நெல்லைசுபாஷ் ஜானகிராமன் ஜெயந்தி கென்னடி ஜான் பீட்டர் நகர விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் பால்ராஜ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் அரவிந்தன், அய்யம்பாளையம் பேரூராட்சி மன்ற தலைவர் ரேகாஅய்யப்பன், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், அகரம் பேரூராட்சி மன்றத்தலைவர் நந்தகோபால், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர்கொம்பன் என்ற பாலசுப்ரமணி, வீரக்கல் வசந்தகுமார், டாஸ்மாக் வடிவேலு, தாடிக்கொம்பு அருள் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்த நாளை முன்னிட்டு மதுரை மாநகர் மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் அருண் பாலாஜி ஏற்பாட்டில் பசுமலை சி.எஸ்.ஐ. பள்ளியில் ஆதரவற்ற 500 குழந்தைகளுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது, விழாவில் மதுரை முன்னாள் மேயர் குழந்தைவேல் கலந்து கொண்டு உணவு வழங்கினார் உடன் பகுதிச் செயலாளர்கள் பா.ரமேஷ் குமார் (என்ற) ஜீவன், கு.காவேரி, பொதுக்குழு உறுப்பினர்,முத்து கணேஷ், வட்டச் செயலாளர்கள் ராம்பிரசாத், பாலாஜி, செல்வராஜ், செந்தில், இஸ்மாயில் (மற்றும்) பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



தென்காசி தெற்கு மாவட்டம் சங்கரன்கோவில் நகரக் கழக முன்னாள் செயலாளர் கழக மூத்த முன்னோடி பரம பால்பாண்டியன் அவர்கள் (6.12.2024) அன்று மறைவெய்தினார். அன்னாரது உடலுக்கு பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வகாப் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.உடன் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ உட்பட பலர் உள்ளனர்.

# ஆத்திரம் ஏன்? ஆவேசம் ஏன்? ஆர்ப்பாட்டங்கள் ஏன்?....

"....ஆளுங்கட்சி என்றால், என்ன வேண்டுமானாலும் பேசலாம் என்று, நினைக்கிறார்களா?... எங்க ஐயாவ பத்திப் பேசினால், கத்தி எடுத்து வந்து வெட்டுவேன்" என்று ஆவேசமாகப் பாட்டாளி மக்கள் கட்சி கிருஷ்ணகிரி மாவட்ட மகளிர் அணி பொறுப்பாளர் இராதாமணி என்பவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் அக்கட்சியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது பேசி உள்ளார்.

இப்படி ஒரு செய்தியை முதல் பக்கத்தில் முதன்மைச் செய்தியாகக் கொட்டை எழுத்துகளில். "ஆர்ப்பாட்டம்... தமிழ்நாடு முழுவதும் பா.ம.க. தொண்டர்கள் ... இராமதாஸ் பற்றி ஸ்டாலின் பேச்சுக்கு எதிர்ப்பு..." என்று தினமலர் ஏடு கடந்த நவம்பர 27 ஆம் தேதி தலைப்பிட்டச் செய்தியில் வெளியிட்டிருக்கிறது.

செய்தியாளர்கள் முதல்வர் தளபதி அவர்களின் சந்திப்பின்போது, பல்வேறு கேள்விகளுக்குப் பதில் அளித்துக் கொண்டிருந்த போது, இராமதாஸ் அறிக்கை பற்றிய வினா எழுப்பினர். அதற்குப் விடையளித்த முதல்வர் தளபதி, ".. இராமதாசு அவர்களுக்கு வேறு வேலை இல்லை; தினமும் அறிக்கை வெளியிடுகிறார்; அதற்குப் பதில் கூற வேண்டிய அவசியம் இல்லை" என்று சொல்லியிருந்தார்.

உடனே, பா.ம.க. தலைவர் அன்புமணி இராமதாஸ் முதல்வர் ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டும்; இல்லையேல் பா.ம.க. தொண்டர்கள் உணர்ச்சி வசப்படுவதைத் தடுக்க முடியாது" என்று வன்முறை நிகழ்த்தும் மிரட்டல் தொனியில் பேசி இருந்தார்.

இதற்கு அமைச்சர் சிவசங்கர் பதிலளிக்கையில், "விழுப்புரத்தில் சுட்டுக் கொல்லப்பட்ட தியாகிகளான உயிர் நீத்த 21 பேர்க்கான நினைவு மண்டபம் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் கட்டுகிறார்.அதைத் திறக்கவும் உள்ளார். அவருக்கு மதிப்பு உயருகிறதே என்ற ஆதங்கத்தில் தான் இராமதாஸ் இப்படி எல்லாம் பேசுகிறார். முதல்வர் எடுத்தெறிந்து பேசுபவர் இல்லை; யாரையும் குறைத்தும் பேசவும் இல்லை; அதனால் மன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் எழவில்லை; உடனடியாக அன்புமணி தான் பேசுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று மிகத் தெளிவாகவே சொல்லியிருக்கிறார்.

அதைப் போல அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபுவிடம் நிருபர்கள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு "மன்னிப்பு கேட்கும் வழக்கமே திமுகவுக்கு இல்லை " என்றும் சொல்லியுள்ளார்.

மற்றொரு அமைச்சரான சிறு குறு நடுத்தரத் தொழில் அமைச்சர் த.மோ. அன்பரசன் இது குறித்துப் பேசும்போது, "... அவர் கலைஞரின் மகன். பெரியாரின் பேரன் அண்ணாவின் தம்பி. பா.ம.க.போன்ற மிரட்டல்களுக்கு எல்லாம் அவர் அஞ்சுபவர் அல்ல. நெருக்கடிக் கால நெருப்பாற்றில் நீந்தி வந்தவர். தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வர்; ஏழு கோடி தமிழ் மக்களுக்காக "உழைப்பு! உழைப்பு! உழைப்பு! என்று கலைஞர் பாராட்டியது போல் 24 மணி நேரமும் உழைத்துக் கொண்டிருக்கிற ஓர் உன்னதமான தலைவர.! அவர் பனங்காட்டு நரி! இது போன்ற எந்தச சலசலப்புக்கும் அஞ்ச மாட்டார்! எந்த மிரட்டலைக் கண்டும் அவர் ஓடிப் போகவும் மாட்டார்" என்று பதில் அளித்துள்ளார்.

அதானி முறைகேடுகள் பற்றி இராம தாஸ், தான் கூட்டணி வைத்திருக்கிற பா.ஜ.க தலைவர் பிரதமர் மோடியிடம் கேட்காமல், தமிழ்நாடு முதலமைச்சரைப் பேசுவது எப்படி சரியாகும்? என்று வைகோ கேட்டிருந்தார். "....அதானிக் குழுமத்திற்கு நெருக்கமான பிரதமர் மோடி மீது குற்றச்சாட்டுகளைத் தொடுக்க வேண்டிய பாமக நிறுவனர் தலைவர் இராமதாசு, வதந்திகளைச் செய்தியாக்கும் நோக்கத்தில், தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் மீது குற்றம் சாட்டி அறிக்கை விடுத்துள்ளார..அவர் தலைமை அமைச்சர் மீது ஏன் குற்றச்சாட்டு முன் வைக்கவில்லை? தி.மு.க மீதும் ,தமிழக அரசு மீதும் புழுதிவாரித் தூற்றும் நோக்கத்தோடு அறிக்கை கொடுத்துள்ளார். பொறுப்பற்ற பொய் வதந்திகளுக்கெல்லாம் பதில் கூற வேண்டிய அவசியம் இல்லை. அதனால் தான், முதல்வர் மு.க. ஸ்டாலின் சரியான பதிலை ஒரு வரியில் சொல்லிவிட்டார். இந்தப் பிரச்சினையில் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி மீது குற்றச்சாட்டு வைக்க பா.ம.க தயாரா? பாஜகவுடன் கூட்டணி வைத்துக்கொண்டு பிரச்சனையைத் திசை திருப்ப பாமக தலைவர் முயற்சிக்கிறார். ஆனால் அந்த முயற்சிகள் பயனற்று போகும்!" என்று இராமதாஸுக்கு அறிவுரை கூறியிருக்கிறார் வைகோ.

முதல்வர் தரக்குறைவான வார்த்தைகளைப் பேசி விட்டார் என்று சொல்லுகிற அன்புமணி, அந்த வார்த்தைகளை அறிவிக்க வேண்டும்? "இராமதாஸ்க்கெல்லாம் பதில் கூற வேண்டிய அவசியம் இல்லை" என்று சொல்லுவது எந்த விதத்தில் தர குறைவான வார்த்தை? ஐயா இராமதாஸ், அவர் மகன் அன்புமணி இராமதாஸ் ஆகிய இருவரும் பேசிய வார்த்தைகளைப் பட்டியலிட்டால் இவர்களை எங்குக் கொண்டு நிறுத்தி விசாரிப்பது?

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவைப் பற்றி வெள்ளைப் பன்னி என்றும், தெரு நாய் என்றும் இழிவுபடுத்தும் விதத்தில் சொன்னாரா? இல்லையா? அதிமுகவுடன் கூட்டணி வைத்துக் கொண்டால் அது பெற்ற தாயுடன் உறவு வைத்துக் கொள்வது போன்றது; அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்தாரா? இல்லையா?

எட்டுவழிச் சாலை குறித்து செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பொழுது முதல்வராக இருந்த எடப்பாடி பழனிசாமியையும், துணை முதல்வராக இருந்த பன்னீர் செல்வத்தையும் டயர் நக்கிகள் என்று சொன்னது யார்? இதே அன்புமணி இராமதாஸ் தானே?

பா.ஜ.க.வில் தமிழ் மாநிலத் தலைவியாகத் தமிழிசை சௌந்தரராஜன் நியமனம் செய்திருந்த போது, அவரைப் பற்றி ஒருமையில் பதிவிட்டு இருந்தார் அன்புமணி இராமதாஸ். "நீ எல்லாம் கட்சித் தலைவராக இருக்கத் தகுதி இருக்கா? நீங்கள் எல்லாம் பார்வையாளராக இருந்தவர்கள் தானே? என்று மரியாதை குறைவாகப் பதிவிட்டு இருந்ததைக் கண்டித்த தமிழிசை சௌந்தரராஜன், "என் தகுதி பற்றிப் பேச அன்புமணிக்கு என்ன தகுதி இருக்கிறது? ஏதோ தான் தான் அதி புத்திசாலி என்பது போலவும், மற்றவர்களுக்கெல்லாம் அது போல் இல்லை என்பது போலவும், அரசியல் பேசுவதற்குக் கூட அன்புமணிக்குத் தகுதி இல்லை: என்று சொன்னவர் தானே! இவர்கள் வந்து தகுதி பற்றிப் பேசலாமா?" ....என்று கடுமையாகச் சாடி செய்தியாளர்களிடம் கூறியிருந்தார் தமிழிசை சௌந்தரராஜன். அது எல்லாம் நினைவுக்கு வருகிறதா அன்புமணி இராமதாஸ்க்கு?

வன்னிய மக்களைப் பகடைக்காய்களாகப் பயன்படுத்தித் தங்களது சுய நலத்திற்காகக் கொள்கைகளைக் காவு கொடுத்து விட்டு, மதவெறி பிடித்த பா.ஜ.க.வுடன் கூட்டணியில் இணைந்து, பூவோடும் பொட்டோடுமாகக் கட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் தந்தையும் மகனுமான பா.ம.க. தலைவர்கள்! சிறுபான்மை மக்கள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு எதிராக சமூக நீதித் திட்டங்களை எல்லாம் குழி தோண்டிப் புதைத்து விட்டு, குடியுரிமைச் சட்டம் வேளாண்மைச்சட்டம், முத்தலாக் சட்டம் காஷ்மீர் சிறப்பு சட்டங்கள் ரத்து செய்தல், ஒரே நாடு ஒரே தேர்தல் பொது சிவில் சட்டம் என்பன போன்ற சர்வாதிகார கொள்கைகளுக்கு ஆதரவு தந்து வருவதுடன் சமூக நீதித் திட்டங்கள் எல்லாம் குழி தோண்டிப் புதைத்து விட்டு நாடகம் ஆடுகிறார்கள்.

இவர்கள் ... பாராளுமன்றத்திற்கு மிக மிகக் குறைவான நாட்களே வந்தவர் இராஜ்ய சபா உறுப்பினரான அன்பு மணி இராமதாஸ் என்று பாராளுமன்றமே நற்சான்றிதழ் பட்டம் வழங்கியது. அவர் கேட்கிறார் தளபதி மு.க. ஸ்டாலின் மன்னிப்பு கேட்க வேண்டுமாம்; அவருடைய தந்தை தமிழ்க் குடிதாங்கி ஐயா இராமதாஸ்" ஒருமையில் ஒரு முதலமைச்சரை பேசுகிறார் என்றால், ஐயா இராமதாஸுக்குச் சிவப்புக் கம்பளம் விரித்து கூப்பிடச் சொல்கிறாரா?

கடந்த காலத்தில் வன்னியர் தலைவர்களாக விளங்கிய பெருமக்களான எஸ். எஸ். இராமசாமி படையாட்சி, மாணிக்கவேல் நாயக்கர், வாழப்பாடி இராமமூர்த்தி, வன்னியர் குருவான, ஏ.கே நடராஜன், கோபால் நாயக்கர் (வன்னிய அடிகளார்),

ஏ. கோவிந்தசாமி அனைத்து, இந்திய பாட்டாளி மக்கள் கட்சியின் முன்னாள் நிறுவனர் சி.என். இராமமூர்த்தி போன்றவர்களுக்கு இவர்கள் செய்த நற்செயல்களையும் இதற்கு அவர்கள் தந்த, பாராட்டு பத்திரங்களையும் சொல்லட்டும். வன்னியப் பெருங்குடி மக்களுக்குத் துரோகம் செய்வது; சாதிய மோதலை ஏற்படுத்துவது போன்றவற்றுக்கு யார்? யார்? எரிகிற தீயில் நெய் ஊற்றினார்கள் என்பதையும் சொல்லட்டும். முதன் முதலில் யார் மன்னிப்பு கேட்க வேண்டும்? ஏன் கேட்க வேண்டும்? என்று வன்னியச் சமுதாய மக்கள் கூறட்டும்.! இதனை "மாற்றம்... முன்னேற்றம்!... ஏமாற்றம்..! அன்புமணிகள் சொல்லத் தயாரா?

"அண்டம் கிடு, கிடுக்க, வட தமிழ்நாடு ஸ்தம்பிக்கும் வகையில் ஒரு போராட்டத்தை நடத்துவோம்" என்று மிரட்டல் தொனியில் தனது கட்சியினருக்குக் கூப்பாடு போட்டு இருக்கிறார் ஐயா இராமதாஸ். இது போன்ற போராட்டங்களைக் கடந்த காலத்தில் நடத்தி அரசின் பொது சொத்துக்களைச் சேதப்படுத்தியதற்காக ஜெயலலிதா சட்டமன்றத்தில் கண்டனம் தெரிவித்தார். "இராமதாஸ் பயங்கரவாதத்தைத் தூண்டி விடுகிறார்; பொதுமக்களின் சொத்துக்களை சூறையாடும் விதத்தில் நடந்து கொள்கிறார். இப்படிப் பொதுச் சொத்துக்களைச் சேதப் படுத்தினால் அவர்கள் மீது குற்றவியல் வழக்கு பாய்வது மட்டுமல்ல; அவர்களின் கட்சித் தலைமையே அதற்கான இழப்பீட்டுத் தொகையை அரசுக்குச் செலுத்தியாக வேண்டும்" .... என்று கூறினார்.

மேலும் பாட்டாளி மக்கள் கட்சி பயங்கரவாதத்தைத் தூண்டிவிடும் வகையில் நடப்பதால் அக்கட்சி தடை செய்யப்படும்" என்று சொல்லியதோடு அன்றைய பிரதமர் நரசிம்மராவுக்குக் கடிதம் ஒன்றை எழுதினார் ஜெயலலிதா! ஆனால் அவ்வாறான கடிதம் எழுதிய ஜெயலலிதாவிற்குக் கடுமையான முறையில் தி.மு.க. தலைவர் கலைஞர் அவர்கள் "ஜனநாயக நாட்டில் நடக்கும் சில அரசியல் கட்சி களின் செயல்களுக்காக ஆளுகின்றவர்கள் இது போன்ற தவறுகளைச் செய்து விடக்கூடாது" என்று கூறிக் கலைஞர் அவர்கள் கண்டனம் தெரிவித்ததெல்லாம். ஐயா தமிழ்க் குடிதாங்கி இராமதாஸ் அவர்களுக்கு நினைவு வருகிறதா?


**கவிஞர் தமிழ்தாசன்**
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்




ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சியில் மாமல்ல புரத்தில் சித்திரை திருவிழா பா.ம.க. சார்பில் கொண்டாடப்பட்டது. அப்பொழுது மரக்காணம் அருகில் இரு சமுதாய மக்கள் மோதலை உருவாக்கி அதன் மூலம் உயிர்ச்சேதமும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டபொழுது சிறைக்கு அனுப்பப்பட்டவர்தான் ராமதாஸ் அவர்கள். அவரை விடுதலை செய்ய வேண்டி அவருடைய மனைவி சரஸ்வதி அவர்கள் கொடுத்த கடிதத்தை சட்டமன்றத்தில் முதலமைச்சர் ஜெயலலிதா வாசித்துக்காட்டி அவருடைய துணைவியார் வந்து சந்தித்ததாகவும் அவர் ஒரு இதய நோயாளி என்றும் அவரை சிறையிலிருந்து விடுதலை செய்யவேண்டும் என்றும் வேண்டுகோள் வைத்தார். ஆனால், சட்டப்படி தாங்கள் அந்த வழக்கை சந்திக்கவேண்டும் என்று நான் மறுத்து அம்மையாரை அனுப்பி விட்டேன் என்று பேசியதெல்லாம் இராமதாசுக்கு நினைவிருக்கிறதா? திண்டிவனத்தில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகத்தை தாக்குதல் நடத்தியபொழுது அவருடைய உறவினர் இறந்து போனார். அவரோ காருக்கு அடியில் படுத்து உயிர் தப்பினார். அந்த வழக்கில் சிக்கியவர்கள் நீதிமன்றத்திற்கு நடந்து கொண்டிருந்தார்களே அதற்கு காரணமானவர்கள் யார்? என்பதை இராமதாசு அவர்களும் அவருடைய மகன் அன்புமணி ராமதாஸ் அவர்களும் பதில் சொல்ல வேண்டும்!

எம்.ஜி.ஆர். தலைமையிலான அ.தி.மு.க. ஆட்சி நடந்து கொண்டிருந்தபோது, வன்னியர் சங்கம் போராட்டம் என்ற பெயரில், இதே இராமதாஸ் அறிவித்த அறிவிப்பின் கீழ் ஒரே சமயத்தில் வட மாவட்டங்கள் முழுக்கப் போராட்டம் தொடங்கியது. பேரறிஞர் அண்ணா பிறந்த நாளான (15091987) அன்று, கழகத் தலைவர் கலைஞரின் அழைப்பை ஏற்று, அண்ணா அறிவாலயம் புதிய கட்டிடம் திறக்கப்படும் நிகழ்ச்சிக்குத் தென் பகுதி யிலிருந்து கழகத் தோழர்கள் வந்து கொண்டிருந்த அவர்களின் வாகனங்கள் மீது தாக்கு தல்கள் நடத்தப்பட்டன. இருதரப்பினர்க்கும் மோதுதலை உருவாக்கிச் சீரழித்தவர்கள் யார்? அதற்காகவே நிகழ்ச்சியை மறுநாள் தள்ளி வைத்துத் திறப்பு விழா நடத்தினார் கலைஞர். அந்நாளில். வாகனங்கள் செல்வதைத் தடுப்பதற்காக மரங்கள் வெட்டிப் போடப்பட்டன; சாலை மறியல்கள் நடத்தப்பட்டன; பொதுச் சொத்துக்குச் சேதங்கள் விளைவிக்கப்பட்டன.

எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் வன்னியர்கள் இட ஒதுக்கீடு கேட்டுப் போராடியவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் 21 பேர் மடிந்தார்கள். அவர்களெல்லாம் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி அப்போது அ.தி.மு.க. அரசு சொல்லி வந்தது. ஆனால், 1989 இல் கழக ஆட்சி அமைந்து, கலைஞர் முதலமைச்சரானதும் வன்னியர் சங்கம் போன்ற அமைப்புகளை அழைத்து, செத்துப் போன 21 தியாகிகளைப் போற்றும் விதத்தில் சமூக நீதிப் போராளி கள் என்று கருதி, இறந்து போன ஒவ்வொரு குடும்பத்திற்கும் மூன்று இலட்சம் வீதமும் மற்றும் மாதந்தோறும் ரூபாய் ரூ 1,500 வீதமும், (தற்போது அதிகமாக்கப்பட்டுள்ளது) கொடுக்க உத்தர விட்டார். கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் பயன் பெற 50 விழுக்காடு பின்தங்கியோர் பட்டியலில் இருந்து, வன்னிய பெருங்குடி மக்கள் உள்ளிட்ட 106 சாதிகளை இணைத்து மிகவும் பின்தங்கியோர் என ஒரு பட்டியலை உருவாக்கினார். அவர்களுக்கு 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டை அளித்தார். சாலை மறியலில் ஈடுபட்ட சுமார் 2 லட்சம் பேர் மீது அதிமுக ஆட்சியில் போடப்படட்டிருந்த குற்றவியல் வழக்குகளையும், 5பேர் மீது போடப்பட்டிருந்த குண்டர் சட்டத்தையும் தள்ளுபடி செய்தார்.

மேலும், வன்னிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களைச் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாகியது மட்டுமல்ல; மாநில, ஒன்றிய அமைச்சர்களாகவும் ஆக்கிப்பெருமைப்படுத்தியுள்ளார்யுள்ளார். ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகளைத் தகுந்த இடத்தில் பொறுப்பில் உட்கார வைத்தார். முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏ. கோவிந்த சாமிஅவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்பியுள்ளார். இராமசாமி படையாட்சி அவரகளுக்குச் சென்னையில் சிலை திறந்து வைத்து மரியாதை செலுத்தியுள்ளார். இட ஒதுக்கீடு கேட்டுப் போராடிய தியாகிகளுக்கு விழுப்புரம் வழுதரெட்டியில் மணிமண்டபம் கட்டி விரைவில் திறக்கவும் உள்ளார்.

சமூக நீதிக் காவலரான கலைஞர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருக்கிறார் மு.க.ஸ்டாலின். அனைத்துத் தரப்பு மக்களுக்குச் செய்ததைப் போல வன்னிய பெருங்குடி மக்களுக்கும் செய்த திராவிட முன்னேற்றக் கழகச் சாதனைகளை எவராலும் மறக்க முடியாது! அதுபோல் மறைத்து விடவும் முடியாது! இதற்கிடையில் அறிக்கைகள் ஏன்? ஆவேசங்கள் ஏன்? ஆத்திரந்தான் ஏன்? ஆர்ப்பாட்டங்கள் ஏன் என்பதைப் பா.ம.க தலைமை உணர வேண்டும்!